# THE SOCIAL AND LIVELIHOOD IMPLICATIONS OF RISING LIVING COSTS FOR SANITATION WORKERS: A SOCIOLOGICAL INVESTIGATION BASED AT THE UNIVERSITY OF JAFFNA

Sarththiga.G

*Department of Sociology, University of Jaffna, Sri Lanka*

sarthisarthi1995@gmail.com

**Abstract**

The economic crisis caused by the COVID-19 pandemic means sanitation workers are already vulnerable to many risks, especially those whose livelihood relies mainly on sanitary work and those who are less likely to receive social and economic protection. The overall purpose of this study was to assess the social and livelihood issues of living costs for sanitation workers. According to a report issued by the Clean Well Company, there are 109 sanitary workers working at the University of Jaffna. This study utilized a mixed methodology. A questionnaire survey, key informant interviews, and case study methods were employed as the primary data. All 106 sanitary workers were included in this study. Research ethics were strictly followed by the researchers throughout the research. The quantitative data collected through the questionnaire method was analysed using descriptive statistical methods with the usage of SPSS version 21. Qualitative data obtained from the case study methods and key informant interviews was analyzed thematically. Results reveal that Hinduism (90.6%) was the predominant religion of the majority of the respondents, and 22.6 % of the respondents belonged to the age group of 21–25 years. The majority (85.8%) of the sanitary workers have completed their secondary educational qualifications. More than 26% of the respondents' monthly income was less than 20, 000 Sri Lankan Rupees. Results also highlight that sexual threats (8.5%), poor participation in social functions and neglect of social activities (24.1%), poverty and education-related problems of children (26.5%) were the significant social issues facing sanitary workers. Results also indicate that daily living costs (59.4%), debt issues (58.5%), unemployment (9.4%), and lack of employability skills (0.9%), wage exploitation (10.4%), educational expenses for children (1.9%), and transport expenses (13.2%) were the major underlying livelihood issues of sanitary workers. The findings of the study reveal that sanitary workers encountered severe social and livelihood problems. This study strongly suggests that the government should provide employment opportunities and should enhance the quality of life and well-being for them.

**Keywords**: *Corporation, Quality of life, Sanitation worker, Waste collection, Well-being*

## 1. ஆய்வு அறிமுகம்

சுத்திகரிப்புத் தொழில் அசுத்தமான தொழிலாகக் காணப்பட்டாலும் பெரும்பாலான சமூகங்கள் சுத்திகரிப்புப் பணியாளர்கள் இல்லாமல் வாழமுடியாது. ஏனெனில் சுத்திகரிப்புப் பணியாளர்கள் தங்கள் சமூகங்களுக்கு அழுக்குகளை அல்லது குப்பைகளைச் சேகரிக்கும் பெறுமதியான சேவையைச் செய்கின்றார்கள். சுத்திகரிப்புச் சங்கிலியின் (Sanitation chain) எந்தப் படிநிலையிலும், சுத்தம் செய்தல், பராமரித்தல், இயக்குதல் அல்லது காலியாக்குதல் போன்றவற்றிற்குப் பொறுப்பான அல்லது பணிபுரியும் அனைவரையும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் என்ற சொல் குறிக்கின்றது(World Health Organization, International Labour Organization, World Bank and Water Aid, 2019). உலகளவில் சுத்திகரிப்புப் பணியாளர்கள் கழிவுநீர்க் குழிகள் மற்றும் வடிகால்களைச் சுத்தம் செய்தல், வீதிகளைச் சுத்தப்படுத்தல், மனித மற்றும் விலங்குக் கழிவுகளை வெளியேற்றல் சாக்கடைகள் மற்றும் கழிப்பறைகளைச் சுத்தப்படுத்தல் போன்ற தொழில்களில் ஈடுபடுகின்றனர். சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் (Sanitary Labourers), சுகாதாரத் தொழிலாளர்கள் (Health Labourers)> கையேடு தோட்டிகள் (Manual Scavengers) எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றனர்(Ihalagedara and Mallika, 2015).

இலங்கையில் சாதி ரீதியாகத் தாழ்த்தப்பட்டவர்களும் குறைந்த வருமானம் பெறுபவர்களும் இத்தகைய சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுகின்றனர். குறிப்பிட்ட சில சுத்திகரிப்பாளர்கள் போதைப்பொருள் பாவனை, போதைக்கு அடிமையாதல், குற்றச் செயல்களில் ஈடுபடல், திருடுதல் மற்றும் விபச்சாரம் போன்ற பிறழ்வு நடத்தைகளில் ஈடுபடுகின்றமையால் சமூக அடுக்கமைவில் தாழ்த்தப்பட்டவர்களாக நோக்கப்படுகின்றனர் (Silva et.al., 2009, p.111). இலங்கையின் குடிப்புள்ளிவிபரவியல் மற்றும் தொகைமதிப்பீட்டுத் திணைக்களத் தரவின்படி அதிக சனத்தொகை கொண்ட மாகாணமாக மத்தியமாகாணம் காணப்படுகின்றது (Census of population and Housing, 2012). இத்தரவின்படி கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் அதிகளவு திண்மக்கழிவுகள் காணப்படுவதுடன் மாத்தளை மாவட்டமானது அதிகளவு கழிவுகளை வெளியேற்றும் இரண்டாவது மாவட்டமாக மாநகர சபையால் அடையாளம் காணப்பட்டுள்ளது (Database of Municipal Solid Waste in Sri Lanka, 2015).

சுத்திகரிப்புப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளாக சமூக அடுக்கமைவில் தாழ்ந்த நிலையினைப் பிரதிபலித்தல், சமூகநலச் செயற்பாடுகளில் இருந்து விலக்கப்படுதல், கல்வித்தரம் குறைவு, குடும்பத்துடன் தொடர்புபட்ட பிரச்சினைகள், சாதிய வேறுபாடு, சமூகக் களங்கம் மற்றும் பாரபட்சத்திற்குள்ளாதல் போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர;(Ihalagedara and Mallika, 2015). அத்துடன் தொழில் செய்யும் இடங்களிலும் சமூகத்திலும் பாரபட்சப்படுத்தல் மற்றும் களங்கப்படுத்துதல் போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன் அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாகவும் காணப்படுகின்றனர்(Sophia & Pavithra, 2017). மேலும், வாழ்வாதாரப் பிரச்சினைகளாக குறைந்த வருமானம், கடன் பிரச்சினை, வாழ்விடங்களில் அடிப்படை வசதிகளின்மை மற்றும் குறைந்தளவான சொத்துடைமை போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர;. அத்துடன் குறைந்தளவான ஊதியம், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமை, நிலுவைக் கடன் பிரச்சினை, போக்குவரத்துச் செலவு அதிகம், மருத்துவச் செலவு, திருமணச் செலவு, ஒப்பந்தக்காரர்களால் சுரண்டப்படுதல், கல்விச் செலவீனம் மற்றும் குடும்ப மற்றும் குழந்தைகளைப் பராமரிக்க முடியாமை போன்ற வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்(Dalit Bahujan Resource Centre, n.d). ஆய்வு ஒழுங்கமைப்பான கிளீன்வெல் நிறுவனத்தின் கீழ் 109 சுத்திகரிப்புப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுகின்றனர்(கிளீன்வெல் நிறுவன அறிக்கை, 2020). வாழ்க்கைச்செலவு அதிகரிப்பினால் ஆய்வு ஒழுங்கமைப்பில் சுத்திகரிப்புத்தொழிலில்

ஈடுபடுபவர்கள் குறைந்த கல்வித்தரம், குடும்பத்தைப் பாதுகாப்பதில் சிரமத்தை எதிர்கொள்ளல், சமூக அந்தஸ்து நிலையில் தாழ்வாக நோக்கப்படுதல், சமூகக் களங்கம், குறைவான சுயமதிப்பு, மற்றும் பாரபட்சத்திற்கு உட்படல் போன்ற சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன், நாளாந்த வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்ற முடியாமை, கடன், குறைவான ஊதியம், ஊதியம் சுரண்டப்படுதல், சேமிப்பின்மை, போக்குவரத்துச் செலவு அதிகம் மற்றும் மருத்துவச் செலவு அதிகம் போன்ற வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர். எனவே யாழ்ப்பாணப் பல்கழைக்கழக கிளீன்வெல் நிறுவனச் சுத்திகரிப்புப் பணியாளர்களின் சமூக மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் முக்கியமான பிரச்சினைகளாக இனங்காணப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2. ஆய்வின் நோக்கம்**

சுத்திகரிப்புப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் சமூக மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை இனங்காண்பதுடன் சமூக மற்றும் வாழ்வாதார விளைவுகளையும் மதிப்பிடல் ஆய்வின் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது.

**3. ஆய்வு முறையியல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சுத்திகரிப்புப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் கிளீன்வெல் நிறுவனத்தின் கீழ் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுகின்றார்கள்(கிளீன்வெல் நிறுவன அறிக்கை, 2020). அந்தவகையில் கிளீன்வெல் நிறுவனம் ஆய்வு ஒழுங்கமைப்பாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் கலப்புமுறையினைப் (mixed method) பயன்படுத்தி ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கிளீன்வெல் நிறுவனத்தின் கீழ் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடும் 106 சுத்திகரிப்புப் பணியாளர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். மற்றும் சுத்திகரிப்புப் பணியாளர்களில் தீவிரமான உளநோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஒரே நேரத்தில் வாய் பேச மற்றும் காது கேட்க முடியாத 3 சுத்திகரிப்புப் பணியாளர்கள் விலக்கப்பட்டுள்ளனர். முதன்நிலைத் தரவுசேகரிப்புக் கருவிகளாக விடய அய்வு, பிரதான தகவல் வழங்குநருடனான நேர்காணல் மற்றும் நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கொத்து என்பன பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வு ஒழுங்கமைப்பில் 12 விடய ஆய்வுகள் ஆண் மற்றும் பெண் சுத்திகரிப்புப் பணியாளர்களிடம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களுக்கான பிரதான தகவல் தருநருடனான ஆழமான நேர்காணல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுத்திகரிப்பு மேற்பார்வையாளர் அதிகாரியிடம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு ஒழுங்கமைப்பைச் சேர்ந்த 106 சுத்திகரிப்புப் பணியாளர்களிடம் வினாக்கொத்து மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. கிளிநொச்சி வளாக 10 சுத்திகரிப்புப் பணியாளர்களிடம் வினாக்கொத்தானது பூர்வாங்க ஆய்வு (Pilot study) மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுசேகரிப்புக் கருவிகளாக கிளீன்வெல் நிறுவன அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளத் தரவுகள் போன்றவற்றிலிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன.

**ஆய்வு ஒழுக்கவியல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுத்திகரிப்பு மேற்பார்வை அதிகாரியிடம் அனுமதி பெறப்பட்ட பின்னரே சுத்திகரிப்பாளர்கள் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளனர். ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட சுத்திகரிப்பாளர்களிடம் அறிந்து அளிக்கப்பட்ட எழுத்து மூலமான ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே வினாக்கொத்து மூலம் தரவுகள் பெறப்பட்டன. ஆய்விற்குத் தேவையான தகவல் வழங்கியவர்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டதுடன் ஆய்வில் பங்குபற்ற நிரப்பந்தம் எதுவும் கொடுக்கப்படவில்லை. ஆள் அடையாளங்கள் எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை. தரவு சேகரிப்புக் கருவிகளில் தரவு வழங்குபவர்களை அசௌகரியப்படுத்தும் எந்தவொரு வினாவும் உள்ளடக்கப்படவில்லை. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட வினாக்கொத்துப் படிவம் பாதுகாப்பான முறையில் சமூகவியல் துறையிடம் கையளிக்கப்பட்டது.

**4. பெறுபேறுகளும் கலந்தாராய்தலும்**

ஆய்வு நோக்கத்திற்காக, வினாக்கொத்து மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கணியம்சார் தரவுகள் விபரணப்புள்ளிவிபரவியல் பகுப்பாய்வினைப் பயன்படுத்தி சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதி (SPSS) version 21 உதவியுடனும், பண்புசார் தரவுகள் கருப்பொருள் உள்ளடக்கப் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சுத்திகரிப்புப் பணியாளர்களின் சமூக மற்றும் குடித்தொகைக் குணவியல்புகள்**

**அட்டவணை 4.1: சமூக மற்றும் குடித்தொகைக் குணவியல்புகள்**

| **மாறிகள்** | **(n=106)** | **எண்ணிக்கை** | **வீதம் (%)** |
|---|---|---|---|
| வயது (வருடங்கள்) | 16-20 | 19 | 17.9 |
| | 21-25 | 24 | 22.6 |
| | 26-30 | 14 | 13.2 |
| | 31-35 | 13 | 12.3 |
| | 36-40 | 6 | 5.7 |
| | 41-45 | 13 | 12.3 |
| | 46-50 | 13 | 12.3 |
| | 51-55 | 3 | 2.8 |
| | 55 வயதிற்கு மேல் | 1 | 0.9 |
| | மொத்தம் | 106 | 100.0 |
| பால்நிலை | ஆண் | 22 | 20.8 |
| | பெண் | 84 | 79.2 |
| | மொத்தம் | 106 | 100.0 |
| மதம் | இந்து | 96 | 90.6 |
| | கிறிஸ்தவம் | 10 | 9.4 |
| | மொத்தம் | 106 | 100.0 |
| குடியியல் அந்தஸ்து | திருமணமானவர் | 50 | 47.2 |
| | திருமணமாகாதவர் | 41 | 38.7 |
| | விதவை/தபுதாரன் | 2 | 1.9 |
| | கைவிடப்பட்டவர் | 8 | 7.5 |
| | விவாகரத்தானவர் | 5 | 4.7 |
| | மொத்தம் | 106 | 100.0 |
| கல்விநிலை | ஆரம்பக்கல்வி (1-5) | 15 | 14.2 |
| | இடைநிலைக்கல்வி (6-11) | 91 | 85.8 |
| | மொத்தம் | 106 | 100.0 |
| குடும்ப மாதாந்த மொத்த வருமானம் (இலங்கை ரூபாவில்) | 10000-15000 | 4 | 3.8 |
| | 15001-20000 | 24 | 22.6 |
| | 20001-25000 | 9 | 8.5 |
| | 25001-30000 | 11 | 10.4 |

| | | |
|---|---|---|
| 30001-35000 | 15 | 14.2 |
| 35001-40000 | 15 | 14.2 |
| 40001-45000 | 16 | 15.1 |
| 45000க்கு மேல் | 12 | 11.3 |
| மொத்தம் | 106 | 100.0 |

(மூலம்: களஆய்வு, வினாக்கொத்து, 2021)

அட்டவணை 4.1 இன்படி 16-25 வயதுப்பிரிவிற்கு உட்பட்ட சுத்திகரிப்புப் பணியாளர்கள் அதிகளவில் (40.5%) காணப்பட்டதுடன் 56 வயதிற்கு மேற்பட்ட சுத்திகரிப்புப் பணியாளர்கள் மிகக்குறைவான அளவில் (0.9%) காணப்பட்டனர். சுத்திகரிப்புப் பணியாளர்களில் 20.8% ஆனவர்கள் ஆண்களாகவும் 79.2% ஆனவர்கள் பெண்களாகவும் காணப்பட்டனர். சுத்திகரிப்புப் பணியாளர்களில் அதிகமானவர்கள் (90.6%) இந்து மதத்தினைப் பின்பற்றுபவர்களாகக் காணப்பட்டதுடன் 47.2% ஆனவர்கள் திருமணமானவர்களாகக் காணப்பட்டனர். அத்துடன் சுத்திகரிப்புப் பணியாளர்களில் அதிகமானோர் (85.8%) இடைநிலைக்கல்வியறிவைக் கொண்டிருந்தனர். மேலும் 20000க்குக் குறைவான மொத்த மாதாந்த வருமானம் பெறும் சுத்திகரிப்புத்தொழில் கொண்ட குடும்பங்கள் அதிகமாகக் காணப்பட்டதுடன் இங்கு பெரும்பாலான சுத்திகரிப்புப் பணியாளர்கள் குறைவான வருமானத்தைக் கொண்டவர்களாகக் காணப்பட்டுள்ளனர். இது குடும்பத்தில் ஊழிய வருமானம், சொத்து வருமானம் மற்றும் ஏனைய வருமானங்கள் என்பவற்றை உள்ளடக்கிய மொத்த வருமானத்தைக் குறிக்கின்றது.

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் பண்புசார் தரவு அமைந்துள்ளது. ''*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அதிகளவில் இளைய வயதுள்ளவர்களே சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் மற்றும் தாய்மார்கள் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுகின்றனர். அதிகளவில் பெண்பிள்ளைகளே இந்தத் தொழிலில் ஈடுபடுவதனை அவதானிக்க முடிகின்றது*''(மூலம்: பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01).

ஆகவே Ajit Lenka (2019), என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சுத்திகரிப்புத்தொழிலாளர்களில் அதிகமானோர் இந்து மதத்தினைப் பின்பற்றுவதுடன் அவர்கள் மிகவும் கல்வி அறிவு குறைந்தவர்காளகக் காணப்படுகின்றனர். அத்துடன் அதிகமானோர் திருமணமாணவர்களாகக் காணப்படுவதுடன், மோசமான பொருளாதார நிலை காரணமாக குறைந்தளவு ஊதியத்தைப் பெற்றுக்கொள்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளமையானது குறித்த ஆய்வுடன் ஒத்துப்போவதாகக் காணப்படுகின்றது.

**அட்டவணை 4.2: சமூக நிகழ்வுகளில் பங்கேற்றல்**

| சமூக நிகழ்வுகளில் பங்கேற்றல் | எண்ணிக்கை | வீதம்(%) |
|---|---|---|
| ஆம் | 87 | 82.1 |
| இல்லை | 19 | 17.9 |
| மொத்தம் | 106 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2021)

அட்டவணை 4.2 இன்படி சுத்திகரிப்புப் பணியாளர்களில் 82.1% ஆனவர்கள் சமூக நிகழ்வுகளில் பங்கேற்பவர்களாகவும் 17.9% ஆனவர்கள் சமூக நிகழ்வுகளில் பங்கேற்காதவர்களாகவும் காணப்பட்டனர். இங்கு மிக அதிகளவானோர் சமூக நிகழ்வுகளில் பங்கேற்பவர்களாகக் காணப்பட்டனர்.

இக் கணியம்சார் தரவை உறுதிப்படுத்தும் வகையிலல் பண்புசார் தரவுகள் அமைகின்றன. *''ஊரில விசேசங்கள் ஏதும் நடந்தால் போறது குறைவு. அம்மா விரும்பிப் போகமாட்டா சொல்லிட்டினம் எண்டதுக்காகப் போவா. நான் போனால் எப்ப கலியாணம் நல்ல நாள் வரேலயோ எண்டு நக்கலா கேட்பினம்''(மூலம்: விடய ஆய்வு 11).*

*''அம்மா எங்களை விட்டுப் போனதில இருந்து ஒரு சமூக நிகழ்வுகளுக்கும் போறதில்லை. செத்தவீடு என்டால் அப்பா போவார். வீட்டிலயும் ஒரு கொண்டாட்டமும் வைக்கிறேல''(மூலம்: விடய ஆய்வு 12).*

**அட்டவணை 4.3: சமூக நிகழ்வுகளில் பங்குகொள்ளும்போது பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தல்**

| பிரச்சினைகளை எதிர்கொள்ளல் | எண்ணிக்கை | வீதம்(%) |
|---|---|---|
| ஆம் | 21 | 24.1 |
| இல்லை | 66 | 75.9 |
| மொத்தம் | 87 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2021).

அட்டவணை 4.3 இன்படி சுத்திகரிப்புப் பணியாளர்களில் 80% ஆனவர்கள் சமூக நிகழ்வுகளில் பிரச்சினைகளை எதிர்கொள்ளாதவர்களாகவும் 20% ஆனவர்கள் சமூக நிகழ்வுகளில் பங்குகொள்கின்றபோது பிரச்சினைகளை எதிர்கொண்டவர்களாகவும் காணப்பட்டனர்.

இதனைப் பண்பு சார்ந்த தரவுகள் வலுப்படுத்துகின்றது *''பொதுவாகவே மனிதர்கள் செய்யும் வேலைகளைப் பொறுத்து உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு மனிதவர்க்கத்தினராலேயே கொடுக்கப்படுகின்றது. சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுபவர்கள் ஏனையோர்களால் இழிவாகவே நோக்கப்படுகின்றனர். சமூக அந்தஸ்து நிலையில் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். சமூக நலச்சேவையிலிருந்து புறக்கணிக்கப்படுகின்றார்கள். சமூக ஆதரவின்மையாலும், வருமானப் பற்றாக்குறையினாலும் சமூக நிகழ்வுகளில் பங்குபற்ற மறுக்கிறார்கள். ஆனாலும் அமங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றனர். பிரதேசங்களில் நடக்கும் சமுர்த்திக் கூட்டங்கள், பாடசாலை பெற்றோர் கூட்டங்கள் மற்றும் பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்கின்றனர்''(மூலம்: பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01).*

*''நான் சமூக நிகழ்வொன்டுக்கும் போறேல. எனக்கு விருப்பமில்லை. செத்த வீடு என்டால் போவன். சமூகம் படிச்ச ஆட்கள ஒரு மாதிரி, படிக்காத ஆட்கள ஒரு மாதிரி பாக்கும். நாங்கள் இந்தத் தொழில் செய்றது என்டால் இன்னும் கேவலமா பாக்கும். போன கிழமை எங்களோட வேலை செயயுறவான்ர அப்பா வருத்தம் வந்து செத்தவர். அப்ப நாங்கள் எல்லாரும் பஸ் பிடிச்சு போனாங்கள். எங்களைக் கண்டுட்டு அங்க நிண்டதுகள் சொல்லுதுகள். டேய் இதுகள் எல்லாரும் கூட்டுப் பாட்டிகளடா. ஒன்டா வருதுகள். எங்கட வேலைய வைச்சு ஏளனமாக் கதைக்குதுகள் எங்களுக்கு அவமானமாப் போச்சு. நாளைக்கு ஏதேனும் நல்ல விசயங்களுக்குப் போனால் எங்கள மதிக்காதுகள். அதால எந்த நல்ல காரியங்களுக்கும் நான் போறேல. போனாலும் சும்மா போகேலாது குறைஞ்சது 1000 என்டாலும் போடோனும். வருஸத்துக்கு ஒரு நிகழ்வோ வரும். ஆயிரம் நிகழ்வு வரும் எல்லாத்துக்கும் போட எங்கட சம்பளம் காணாது''(மூலம்: விடய ஆய்வு 10).*

**அட்டவணை 4.4: சமூகச்செயற்பாடுகளில் முன்னுரிமை வழங்கப்படுதல்**

| சமூகச்செயற்பாடுகளில் முன்னுரிமை வழங்கப்படுதல் | எண்ணிக்கை | வீதம் (%) |
|---|---|---|
| ஆம் | 71 | 67.0 |
| இல்லை | 35 | 33.0 |
| மொத்தம் | 106 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2021)

அட்டவணை 4.4 இன்படி ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சுத்திகரிப்புப் பணியாளர்களில் 67% ஆனவர்கள் சமூகச் செயற்பாடுகளில் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றதாகக் குறிப்பிட்டுள்ளதுடன் 33% ஆனவர்கள் சமூகச்செயற்பாடுகளில் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இதனைப் பண்புசார் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. *''நாங்கள் படிச்சது குறைவு அதால நாங்கள் சமூகத்தில ஏதாவது செயற்பாடுகள் செய்தால் படிச்சவைக்குத்தான் முன்னுரிமை கொடுப்பினம், எங்களை ரண்டாம் பிரசையாகத்தான் எல்லாரும் பாப்பினம்''(விடய ஆய்வு 03).*

*''ஊரில மாதர்சங்கக் கூட்டம் மாதம் ஒருக்கா நடக்கும். ஆரம்பத்தில போனான், அங்க எங்கட கருத்துக்களை கேக்கிறதுக்கு, செயற்பாடுகளைப் பாக்கிறதுக்கு யாரும் இல்லை. போனாலும் பிரயோசனமில்லை அதால இப்ப நான் போறதில்லை''(விடய ஆய்வு 05).*

Ihalagedara and Mallika, (2015) போன்றவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், சுத்திகரிப்புப் பணியாளர்கள் சமூக அடுக்கமைவில் தாழ்ந்த நிலையினைப் பிரதிபலித்தல், சமூகநலச் செயற்பாடுகளில் இருந்து விலக்கப்படுதல், கல்வித்தரம் குறைவு, சமூகக் களங்கம் மற்றும் பாரபட்சத்திற்குள்ளாதல் போன்ற சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளமையானது குறித்த ஆய்வுடன் ஒத்துப்போவதாகக் காணப்படுகின்றது.

**அட்டவணை 4.5: பாடசாலைக் கல்வியிலிருந்து பிள்ளைகள் இடைவிலகுதல்**

| கல்வி கற்கும் பிள்ளைகள் இருத்தல் | எண்ணிக்கை | வீதம்(%) |
|---|---|---|
| ஆம் | 49 | 46.2 |
| இல்லை | 57 | 53.8 |
| மொத்தம் | 106 | 100.0 |
| கல்வியிலிருந்து பிள்ளைகள் இடைவிலகுதல் | எண்ணிக்கை | வீதம்(%) |
| ஆம் | 13 | 26.5 |
| இல்லை | 36 | 73.5 |
| மொத்தம் | 49 | 100.0 |


(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2021)

அட்டவணை 4.5 இன்படி சுத்திகரிப்பாளர்களில் 46.2% ஆனவர்கள் கல்வி கற்கும் பிள்ளைகளைக் கொண்டிருந்ததுடன் 53.8% ஆனவர்கள் கல்வி கற்கும் பிள்ளைகளைக் கொண்டிருக்கவில்லை. மேலும் சுத்திகரிப்புப் பணியாளர்களின் குடும்பங்களில் 26.5% ஆன பிள்ளைகள் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகியுள்ளனர். 73.5% ஆன சுத்திகரிபபுப் பணியாளர்களின் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகவில்லை.

இதனை வலுச்சேர்க்கும் வகையில் பண்புசார்ந்த தரவுகள் அமைந்துள்ளன. *"இங்கு வேலை செய்பவர்களில் குறிப்பிட்ட சிலரின் பிள்ளைகளே கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இன்னும் சிலரின் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்" (மூலம்: பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01).*

MfNt Dutta, (2016) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சுத்திகரிப்பாளர்களின் பிள்ளைகள் அதிகளவில் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளதுடன் குறைவான கல்விப் பின்னணி காரணமாக சிறந்த வேலைவாய்ப்புக்கள் மற்றும் சிறந்த வாழ்க்கைத்தரம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளமையானது குறித்த ஆய்வுடன் ஒத்துப்போகின்றது.

**வரைபு 4.1: பாடசாலைக்கல்வியை இடைநிறுத்தியமைக்கான காரணங்கள்**




(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2021)

வரைபு 4.1 இன்படி சுத்திகரிப்புப் பணியாளர்களின் பிள்ளைகளில் அதிகமானோர் கல்வியில் விருப்பமின்மை மற்றும் தொழிலுக்குச் செல்லல் (38.5%) போன்றன காரணமாக பாடசாலைக் கல்வியினை இடைநிறுத்தியுள்ளனர்.

இதனை வலுச்சேர்க்கும் வகையில் பண்புசார்ந்த தரவுகள் அமைந்துள்ளன. *"இங்கு வேலை செய்பவர்களில் குறிப்பிட்ட சிலரின் பிள்ளைகள் வறுமை காரணமாகவும், கல்வியில் ஆர்வமின்மை காரணமாகவும் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர். இடைவிலகிய பிள்ளைகளைப் பிரதேச செயலக அனுமதியுடன் கற்பதற்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டாலும் பாடசாலை*

*செல்வதை இடைநிறுத்தியுள்ளனர். இங்கு வேலை செய்யும் அநேகமானவர்களுக்கு கல்வி கற்கும் பிள்ளைகள் இல்லை என்றே கூறலாம்''(மூலம்: பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01).*

vdNt Dutta, (2016) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சுத்திகரிப்பாளர்களின் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகுவதற்கான காரணங்களாக, பாரபட்சத்தின் தொடர்ச்சியான நடைமுறை மற்றும் தீண்டாமை எனக் குறிப்பிட்டுள்ளமையானது குறித்த ஆய்வின் காரணங்களுடன் வேறுபட்டு அமைகின்றது.

**அட்டவணை 4.6: பாலியல் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளல்**

| பாலியல் பிரச்சினைகளை எதிர்கொள்ளல் | எண்ணிக்கை | வீதம்(%) |
|---|---|---|
| ஆம் | 9 | 8.5 |
| இல்லை | 97 | 91.5 |
| மொத்தம் | 106 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2021)

அட்டவணை 4.6 இன்படி பாலியல் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டவர்கள் 8.5% ஆகவும் பாலியல் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளாதவர்கள் 91.5% ஆகவும் காணப்பட்டனர். பாலியல் சார்ந்து எதிர்கொள்ளும் அச்சுறுத்தலில் தகாத வார்த்தைப் பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்கள் 7% ஆகவும் காணப்பட்டனர்.

ஆகவே Ajit Lenka (2019), என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வேலை செய்யும் இடங்களில் 4 (1.7%) ஆனோர் வாய்மொழி மூலமான து~;பிரயோகத்தினை எதிர்கொண்டனர் எனக் குறிபிட்டுள்ளமையானது குறித்த ஆய்வுடன் ஒத்துப்போவதாகக் காணப்படுவதுடன் அவர்களது சமூக அடையாளம் காரணமாக வேறுபட்ட சிகிச்சை அனுபவங்களைக் கொண்டிருத்தல் 77 (33.2%) மற்றும் அடிக்கடி அடித்துத் துன்புறுத்தப்படுதல் போன்றன எதிர்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையானது குறித்த ஆய்விலிருந்து வேறுபட்டும் அமைகின்றது.

**அட்டவணை. 4.7: பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ளல்**

| பொருளாதாரப் பிரச்சினைகள் வீதம்(மு) | எண்ணிக்கை | |
|---|---|---|
| வருமானம் நாளாந்த வாழ்க்கைச் செலவிற்குப் போதாமை | 63 | 59.4 |
| வேலைவாய்ப்பின்மை | 10 | 9.4 |
| நிரந்தரத் தொழிலைப் பெற்றுக்கொள்வதற்கான திறன்களின்மை | 1 | 0.9 |
| ஒதுக்கப்பட்ட ஊதியத்தை விடக் குறைவாக வழங்கப்படுதல்(ஊதியச் | 11 | 10.4 |
| சுரண்டல்) | 2 | 1.9 |
| கடனைப் பெற்றுக்கொள்ள முடியாமை | 3 | 2.8 |
| கடனை மீளச்செலுத்த முடியாமை | 2 | 1.9 |
| பிள்ளைகளுக்கான கல்விச் செலவீனம் | 14 | 13.2 |
| போக்குவரத்தச் செலவீனம் | 106 | 100.0 |
| மொத்தம் | | |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2021)

அட்டவணை 4.7 இனூடாக அதிகளவான (59.4%) சுத்திகரிப்புப் பணியாளர்கள் வாழ்க்கைச்செலவு அதிகரிப்புக் காரணமாக அன்றாட வாழ்க்கைச் செலவீனத்தை பூர்த்தி செய்ய முடியாதவர்களாகக் காணப்பட்டுள்ளதுடன் மிகக் குறைவானவானவர்கள் (0.9%) வேலைவாய்பிற்கான திறன்களையும் கொண்டிருக்கவில்லை.

*இதனைப் பண்புசார் தரவுகள் வலுச்சேர்க்கின்றன. ''வறுமை நிலையில் உள்ளவர்கள் அதாவது குடும்பத்தில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாதவர்கள் இங்கு வேலைக்கு வருகின்றனர். வருகின்ற நாள் ஒன்றுக்கு 800.00 சம்பளம் வழங்கப்படும். காலை 7.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை வேலை செய்வார்கள். இங்கு வேலை செய்கின்றபோது சாப்பாட்டுச் செலவு அவர்களைப் பொறுத்தது. குறைந்தளவு வருமானம் பெறும் இத்தொழிலுக்கு விரும்பி வருபவர்கள் மிகவும் பின்தங்கிய வருமானத்தைக் கொண்டவர்கள். இங்கு வேலைக்கு வருவோர் அநேகமானோர் பஸ்ஸில் தான் வருவார்கள். போக்குவரத்துச் செலவையும் இவர்கள் இச்சம்பளம் மூலமே ஈடுசெய்கிறார்கள். தற்கால பொருளாதார நெருக்கடியால் போக்குவரத்திற்குப் பணம் அதிகம். இதனால் நடந்து வேலை செய்ய வருகிறார்கள். மேலும் தமது குடும்பங்களுடன் சகோதரங்களின் குடும்பங்களையும் கவனித்து வருகின்றார்கள். பிள்ளைகளுக்கான கல்விச் செலவையும் ஈடுசெய்ய முடியாதவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களுக்கு வேலை செய்யும் திறன்கள் குறைவாகக் காணப்படுகின்றமையால் நிரந்தரத் தொழில் இல்லாமல் அவதிப்படுகின்றனர்''(மூலம்: பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01)*

*''நான் கம்பஸில வேலைக்கு வாறனான். மகன் ரண்டு பேரும் கொஸ்ரல்ல வேலைக்குப் போறவையள். அவை இரண்டு பேருக்கும் மாதம் 20000 வரும். ஊரில ஒரு கடையில கொப்பிக்கணக்குக்கு சாமான் வாங்குறனாங்கள். எப்பிடியும் மாதம் 15000 கொப்பிக் கணக்கு வரும். 2 மாதமா எங்களுக்குச் சம்பளம் தரல ஆனா அந்த ரண்டு மாதமும் நாங்கள் வேலை செய்தனாங்கள். சம்பளம் தராததால கடையில கொப்பிக் கணக்கு குடுக்க முடியல. கொஞ்ச நாள் கிழமைக்கு ஒருக்கா என்டு ரண்டாயிரத்துக்குச் சாமான் வாங்குறனான். இப்ப 21000 வந்திட்டுது. கடைக்காரர் இனிச் சாமான் தர மாட்டன் என்டு சொல்லிட்டார்''(மூலம்: விடய ஆய்வு 01).*

*''பஸ்ஸில போய் வர காசு நிறைய செலவாகும். வேலை செய்து போட்டு சாப்பிடக் காசு செலவாகும். உடுப்புத்துணி வேண்ட காசு செலவாகும். ஆட்களிட்ட வாங்கின கடன்காசுகள் குடுக்கோணும். வீட்டுக்குச் சாமான் வாங்கோணும், நிரந்தரமா நிண்டு செய்யுற தொழிலும் இல்லை, மேல படிக்காததால வேற தொழில்ல போய்ச் சேரவும் முடியாது. நாளாந்த சாப்பாடு ஏதோ வயிறு நிறைஞ்சால் போதும் எண்ட கணக்கில தான் போகும், சத்தான சாப்பாடு வாங்கக் காசும் காணாது. அப்பான்ர கொஸ்பிற்றல் செலவு, மருந்துச் செலவு எல்லாம் பாக்கோணும், மாதம் மாதம் கிளினிக் போக காசு குடுத்து விடோனும். தம்பின்ர, தங்கச்சியாக்களின்ர படிப்புச்செலவு பாக்கோணும். நாடு போற போக்கில சாப்பிடக்கூட வழியில்லை''(மூலம்: விடய ஆய்வு 11, 12)*

Abhishri and Agrim, (2020) போன்றவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சுத்திகரிப்பாளர்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பொருளாதார மற்றும் நிதிப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவர்களில் பெரும்பாலோனோர் சம்பாதிக்கும் ஊதியம் குறைந்ததபட்ச ஊதியத்திற்கு கீழே குறைகின்றது. மற்றும் அவர்களின் வருவாயில் கணிசமான பகுதி அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்குச் செல்வதில் தீர்ந்துவிடுகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையானது குறித்த ஆய்வுடன் ஒத்துப்போவதாகக் காணப்படுகின்றது. மேலும், Dalit Bahujan Resource Centre, (n.d) எனும்

அறிக்கையில் சுத்திகரிப்பாளர்கள், வாழ்வாதாரப் பிரச்சினைகளாக குறைந்த வருமானம், கடன் பிரச்சினை, குறைந்தளவான ஊதியம், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமை, போக்குவரத்துச் செலவு அதிகம், மருத்துவச் செலவு, ஒப்பந்தக்காரர்களால் சுரண்டப்படுதல் மற்றும் கல்விச் செலவீனம் போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளமையானது குறித்த ஆய்வுடன் ஒத்தப்போவதாகக் காணப்படுகின்றது. எனினும் வேலைவாய்ப்பின்மை மற்றும் நிரந்தரத் தொழிலைப் பெற்றுக்கொள்வதற்கான திறன்களின்மை போன்ற வாழ்வாதாரப் பிரச்சினைகளை குறித்த ஆய்வு ஒழுங்கில் சுத்திகரிப்பாளர்கள் அதிகம் எதிர்கொள்வதனால் குறித்த ஆய்வானது வேறுபட்டு அமைகின்றது.

**அட்டவணை 4.8: கடன் பிரச்சினையினை எதிர்கொள்ளல்**

| கடன் பிரச்சினையை எதிர்கொள்ளல் | எண்ணிக்கை | வீதம்(%) |
|---|---|---|
| ஆம் | 62 | 58.5 |
| இல்லை | 44 | 41.5 |
| மொத்தம் | 106 | 100.0 |

(மூலம் - கள ஆய்வு, வினாக்கொத்து 2021)

அட்டவணை 4.8 இன்படி ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சுத்திகரிப்புப் பணியாளர்களில் 58.5மு ஆனவர்கள் கடன்களைப் பெற்றவர்களாகவும் 41.5மு ஆனோர் கடன்களைப் பெற்றுக்கொள்ளாதவர்களாகவும் காணப்பட்டனர். எனவே அதிகமான சுத்திகரிப்புப் பணியாளர்கள் கடன்களைப் பெற்றுள்ளவர்களாகவே காணப்பட்டனர்.

*இக்கணியம்சார் தரவிற்கு வலுச்சேர்க்கும் வகையில் பண்புசார் தரவுகள் காணப்படுகின்றன.''இங்கு வேலை செய்பவர்களில் அநேகமானவர்கள் மாதாந்த மற்றும் வாராந்தக் கடன்கள் பெறுவதன் மூலம் குடும்பத்தைக் கவனிக்கிறார்கள். நாளாந்தச் செலவு அதிகரிப்பால் மீள அக்கடன்களை செலுத்த முடியாமல் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள்''(மூலம்:- பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01).*

*''வீடு கட்டுறதுக்காக லோன் எடுத்தவர் அப்பா. லோன் ஒழுங்கா கட்டுறேல. நெடுகக் கூலி வேலையும் இருக்காது மாத லோன். அதுவும் சமுர்த்தி வங்கில எடுத்தவர். மூண்டு மாதமாக் கட்டேல. சமுர்த்திக்காரனும் வீட்ட வந்து நெடுகலும் பேசுறவர்''(மூலம்:- விடய ஆய்வு 03).*

**அட்டவணை 4.9: சேமிப்புப் பழக்கத்தைக் கொண்டிருத்தல்**

| சேமிப்புப் பழக்கம் காணப்படுதல் | எண்ணிக்கை | வீதம்(%) |
|---|---|---|
| ஆம் | 62 | 58.5 |
| இல்லை | 44 | 41.5 |
| மொத்தம் | 106 | 100.0 |

(மூலம் - கள ஆய்வு, வினாக்கொத்து 2021)

அட்டவணை 4.9 இன்படி ஆய்வுகக்குட்படுத்தப்பட்ட சுத்திகரிப்புப் பணியாளர்களில் 58.5% ஆனவர்கள் சேமிப்புப் பழக்கத்தைக் கொண்டவர்களாகவும், 41.5% ஆனோர் சேமிப்புப் பழக்கம் அற்றவர்களாகவும் காணப்பட்டனர். எனவே இத்தரவுகளின் அடிப்படையில் அதிகமான சுத்திகரிப்புப் பணியாளர்கள் சேமிப்புப் பழக்கத்தைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் பண்புசார் தரவு அமைந்துள்ளது. “*எனக்கு வேலைக்குப்போற நாட்களைப் பொறுத்து மாசம் 20000 வரும், அதில மாதாந்த வீட்டுச்செலவு 10000 வரும். பஸ் காசு 5000 முடியும். எனக்கு அப்பா இல்லை. அம்மா இருக்கிறா அவாக்கு ஏலாது. மீதி 5000 ஐ நான் பாங்கில போட்டு வைக்கிறனான். ஆவசரத் தேவைகளுக்கு உதவும்''(விடய ஆய்வு 07).*

**அட்டவணை 4.10: கழிவுகளை அகற்றும் போது நோயினை எதிர்கொள்ளல்**

| நோயினை எதிர்கொள்ளல் | எண்ணிக்கை | வீதம்(%) |
|---|---|---|
| ஆம் | 75 | 71.0 |
| இல்லை | 31 | 29.0 |
| மொத்தம் | 106 | 100.0 |

(மூலம் - கள ஆய்வு, வினாக்கொத்து 2021)

அட்டவணை 4.10 இன்படி சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் கழிவுகளை அகற்றும் போது 71% ஆனவர்கள் நோய்களை எதிர்கொண்டதுடன், 29% ஆனவர்கள் நோய்களை எதிர்கொள்ளவில்லை.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் பண்புசார் தரவு அமைந்துள்ளது. *''சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுவபடுபவர்கள் அதிகளவில் கழிவுகளை அகற்றும்போது பல்வேறு வகையான நோய்களை எதிர்கொள்கன்றனர்''(மூலம்: பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01).*

**அட்டவணை. 4.11: எதிர்கொண்ட நோய்கள் (பல் தெரிவுகள்)**

| நோய்கள் | எண்ணிக்கை | வீதம் (%) |
|---|---|---|
| கண் கடித்தல் | 112 | 43.2 |
| தோல் நோய் மற்றும் சிரங்கு | 57 | 22.0 |
| இருமல் | 45 | 17.5 |
| ஒவ்வாமை | 19 | 7.3 |
| சுவாச நோய்கள் | 26 | 10.0 |
| மொத்தம் | 106 | 100.0 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2021)

அட்டவணை 4.11 இன்படி சுத்திகரிப்புத் தொழிலிலாளர்களில் மிக அதிகமானவர்கள் கண்கடித்தல் (43.2%) நோயால் அதிகம் பாதிக்கப்படுவதாகவும், குறைந்தளவானோர் சுவாச நோய் (10%), ஒவ்வாமை (7.3%), சிரங்கு (22%) மற்றும் இருமல் (17.5%) போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டனர்.

இதனைப் பண்புசார்ந்த தரவுகள் வலுவூட்டுகின்றன. *''இது ஒரு ஆபத்தான தொழில். ஆகவே சுகாதார ரீதியாக பல்வேறுபட்ட நோய்களுக்கு உட்படுகின்றனர். பொதுவாக கடி, சிரங்கு போன்ற நோயை அநேகமானவர்கள் எதிர்கொள்கின்றனர். அத்துடன் இருமல், வாந்திபேதி, வயிற்றோட்டம், டெங்கு, சுவாசம் சம்பந்தமான நோய்கள், தொற்றுநோய்கள் போன்றவற்றையும் எதிர்கொள்கின்றனர்''(மூலம்: பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01).*
*''இந்த வேலை கனகாலமா செய்யுறதால நோயள் வாறதில்ல. சில வேலைள கடிக்கும். சவர்க்காரம் போட்டுக் கழுவினால் போடும்''(மூலம்: விடய ஆய்வு 10,11).''…சிலவேளை கடி, சொறி அவ்வப்போது இருக்கும்…''(மூலம்: விடய ஆய்வு 12).*

Ihalagedara & Mallika, (2015) என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சுத்திகரிப்பாளர்கள் தோல் நோய்களை(Eczemas) எதிர்கொள்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளமையானது குறித்த ஆய்வுடன் ஒத்துப்போகின்றது. அத்துடன் Sophia & Pavithra, (2017) போன்றவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சுத்திகரிப்பாளர்கள் தோலுடன் தொடர்புடைய பிரச்சினைகளை (Skin related issues), எதிர்கொள்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளமையானது குறித்த ஆய்வுடன் ஒத்துப்போவதுடன், ஆஸ்துமா(Asthma), இரப்பைக் குடல் நோய்கள்(Gastrointestinal disease), எலும்பு தொடர்பான நோய்கள்(Orthopedic) போன்ற பல்வேறுபட்ட நோய்களை எதிர்கொள்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளமை குறித்த ஆய்விலிருந்தும் வேறுபட்டும் அமைகின்றது.

பாதிப்புறுநிலைக் கோட்பாடானது (Vulnerability Theory) சுத்திகரிப்பாளர்கள் எல்லைப்படுத்தப்பட்ட சமூகக் குழுக்களாகக் காணப்படுவதனால் பிரயோகப்படுத்தப்பட்டுள்ளது. பாதிப்புறுநிலை என்பது சூழலினுடைய தாக்கத்திற்கு எதிர்த்து நிற்க திறமையற்ற நலிந்த தன்மையினை குறித்து நிற்கின்றது. உணர்வுபூர்வமாகவோ அல்லது உடலியல் ரீதியாகவோ ஏனைய காரணிகளால் தாக்கப்படும்போது எதிர்கொள்ளவோ அல்லது எதிர்த்து நிற்கவோ இயலாத தன்மையாகும். முக்கியமாக பாதிப்புறுநிலைத் தன்மை என்பது சமூகப் பாதிப்புறுநிலை மற்றும் அறிதிறன்சார் பாதிப்புறுநிலை என இரண்டு வகைப்படும். சமூக பாதிப்புறுநிலை என்பது பலவிதமான அழுத்தங்கள், அதிர்ச்சிகள், துஸ்பிரயோகங்கள் இயற்கை ஆபத்துக்கள் என்பவற்றை மக்கள், நிறுவனங்கள், சமூகங்கள் எதிர்த்து நிற்க முடியாத அளவிற்கு அவர்களை நலிவடையச் செய்கின்ற காரணிகளாகும். இவைகள் கலாச்சார விழுமியங்களையும், சமூகத்தொடர்புகளையும் துண்டிக்கதக்க அளவிற்கு செயற்படுகின்றன. இந்த வகையில் வாழ்க்கைச்செலவு அதிகரிப்பால் சுத்திகரிப்பாளர்கள் எதிர்கொள்ளும் சமூக மற்றும் வாழ்வாதாரத் தாக்கங்கள் எனும் ஆய்வில் சுத்திகரிப்பாளர்கள் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் இருப்பதாலும், தொழிலைப் பெற்றுக்கொள்ள முடியாமை, சமூகத்தில் வாய்ப்புகள் வழங்கப்படாமை மற்றும் சமூகத்தால் பாரபட்சத்திற்குள்ளாதல் போன்றவற்றால் அழுத்தங்களிற்கு உட்படுகின்ற நலிந்த சமூகக் குழுக்களாகக் காணப்படுகின்றனர். அறிதிறன் பாதிப்புறுநிலை என்பது உளவியல் ரீதியிலான செயற்பாடுகளினை நலிவடையச் செய்யும் ஒரு தன்மை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இது நம்பிக்கையற்ற நிலையிலிருந்து உருவாகக்கூடியது. சுத்திகரிப்பாளர்கள் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நிலையில் காணப்படுவதனால், சமூகரீதியான புறமொதுக்கல் போன்றவற்றினால் மனஅழுத்தத்திற்கு உள்ளாகின்ற போக்குக் காணப்படுகின்றது. அத்துடன் சுத்திகரிப்பாளர்கள் உளவியல் நோய்களின் தாக்கத்திற்கு அதிகமாக உட்பட்டு தனிமை உணர்வு, எதிர்காலம் குறித்த நம்பிக்கையற்ற தன்மை, தீர்மானம் எடுக்க முடியாமை போன்ற உளவியல் பிரச்சினைகளிற்கு முகம்கொடுப்பதனால் பொருளாதாரமீட்டலில் பின்னடைகின்றனர். எனவே பாதிப்புறுநிலைக் கோட்பாடானது இந்த ஆய்விற்காகப் பிரயோகப்படுத்தப்பட்டுள்ளது.

**முடிவுரை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கிளீன்வெல் நிறுவனத்தின் கீழ் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடும் சுத்திகரிப்புப் பணியாளர்கள் பல்வேறு சமூக மற்றும் வாழ்வாதாரத் தாக்கங்களை எதிர்கொள்கின்றனர். சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் அதிகளவானோர் குறைவான கல்வியறிவு, சமூக ஆதரவின்மை, குடும்பத்தைப் பாதுகாப்பதில் சிரமத்தை எதிர்கொள்ளல், சமூகப்புறமொதுக்கல், சமூக அங்கீகாரம் இன்மை, சமூகச் செயற்பாடுகளில் முன்னுரிமை அளிக்கப்படாமை, கௌரவ இழப்பு, மற்றும் குறைவான சுயமதிப்பு போன்ற சமூகப்பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அதேவேளை வாழ்க்கைச்செலவு அதிகரிப்பால் நாளாந்த வாழ்க்கைச் செலவுகளை ஈடுசெய்ய முடியாமை, போக்குவரத்துச் செலவு, மருத்தவச் செலவு, குறைவான ஊதியம், ஒதுக்கப்பட்ட ஊதியம் சுரண்டப்படுதல், கடன் பிரச்சினை மற்றும் சேமிக்க முடியாமை போன்ற வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். மேலும் குறிப்பாக சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மிகவும் ஆபத்தான வேலைகளைச் செய்வதனால் கழிவுகளை அகற்றும்போது பல்வேறு வகையான நோய்களையும் எதிர்கொள்கின்றனர். ஆவற்றுள் கடி, சிரங்கு, ஒவ்வாமை மற்றும் சுவாச நோய்கள் என்பன குறிப்பிடத்தக்கனவாகும். சுத்திகரிப்புப் பணியாளர்கள் சமூகப் பிரச்சினைகளை விடவும் அதிகளவான வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பது ஆய்வின் முடிவாகும். எனவே, சுத்திகரிப்புப் பணியாளர்கள் எதிர்கொள்கின்ற சமூக மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளைக் கண்டறிந்து, தீர்வுகளை முன்வைப்பது அவசியமானதாகும். அந்தவகையில்.

- வாழ்வாதார ரீதியாகப் பின்தங்கிய நிலையில் உள்ள சுத்திரிகரிப்புப் பணியாளர்களுக்கு அடிப்படை ஊதியத்தை அதிகரித்துக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.
- ஒப்பந்தக்காரர்களால் ஊதியம் சுரண்டப்படுதல் நிறுத்தப்படுவதுடன் சுத்திகரிப்பாளர்களுக்கென ஒதுக்கப்பட்ட ஊதியத்தினை நியாயமான முறையில் வழங்குவதற்கு சுத்திகரிப்பு மேற்பார்வையாளர் முன்வர வேண்டும்.
- தரமான தனியாள் பாதுகாப்புக்கருவிகளை வழங்குவதோடு அதனை தொர்ச்சியாக பாவிப்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.
- சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் சமூகக் கௌரவத்தை மேம்படுத்துவதற்கும், முறையான தொழில்சார் சுகாதார விழிப்புணர்வுகளை வழங்கவும் கிளீன்வெல் நிறுவனம் முன்வர வேண்டும்.
- பாதுகாப்பு ரீதியான அச்சுறுத்தல்கள், சுத்திகரிப்பாளர்கள் மீதான தகாத வார்த்தைப் பிரயோகம் மற்றும் உளரீதியாகப் பாதிப்புகளை ஏற்படுத்துவோருக்கு எதிராகக் கடுமையான சட்டங்களை இயற்றுதலும் நடைமுறைப்படுத்தலும் வேண்டும்.

## References

Abhishri, S. and Agrim. G. (2020). Analysing the Working Conditions of Sanitation Workers with Special Reference to Urban Slum Dwellers in a Post COVID-19 Reality, *International Journal of Policy Sciences and Law*, 1(1), India. Retrievd from: https://ijpsl.in

Ajit Lenka. (2019). Health, Identity and Livelihood Status of Sanitation Workers in Bhubaneswar City, Odisha, India. Retrieved from: https://www.researchgate.net

Census of population and Housing. (2012). Department of Census and statistics, Sri Lanka. Retrieved from: https://www.statistics.gov.lk

Clean Well Company Report. (2018). University of Jaffna. Jaffna. Sri Lanka.

Dalit Bahujanan Resource Centre. (n.d). A study on Socio-Economic Status of Sanitary Workers in the Municipal Corporation of Guntur & Vijayawar, India. Retrieved from: https://www.dbrcindia.org

Database of Municipal Solid Waste in Sri Lanka. (2015). Ministry of Environmental Natural Resources Battaramulla, Sri Lanka.

Dutta, G. (2016). Socio-Economic Challenges of Urban Sanitation Workers in Gujarat: An Analysis of Ahmedabad City, India. Retrieved from: https://www.nelti.com

Ihalagaedara, M., and Mallika. P. (2015). Problems Related to Sanitary Laborers in Solid Waste Management: A Case study in Matala Municipal Council, Sri Lanka. Retrieved from: https://www.dcee.ruh.ac.lk.

Silva, K.T., Sivapragasam, P.P., and Thanges, P. (2009). Urban Untouchability: The Conditions of Sweepers and Sanitary Workers in Kandy. In K.T. Silva, P.P Sivapragasam & P. Thanges (Eds.). *Casteless or Caste-blind? Dynamic of concealed Caste discrimination, Social exclusion and Protest in Sri Lanka* (pp. 97-120). International Dalit Solidarity Network, Copenhegan, Indian Institute of Dalit Studies, New Delhi & Kumaran Book House. Retrieved from: https://www.idsn.org

Sopihia, N. and Pavithra, S. (2017). A study on Sanitation Workers at Thiruchirappalli, *International Journal of Applied Research*. Retrieved from: https://www.allresearchjournal.com.

World Health Organization, International Labour Organization, World Bank and Water Aid. (2019). Health, Safety and Dignity of Sanitation Workers: An Initial Assessment. Retrieved from: https://washmatters.wateraid.org